DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் வெள்ளிகிழமை 20ம் நாள் சாட்சியாகிய திவ்யா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திவ்யா | வயது | 32 |
| த/பெ. | ஆதிகேசவலு | இனம் | பெண் |
| கிராமம் | வடமாம்பாக்கம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.9/2023**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் .)

**<u>குறுக்கு விசாரணை எதிர்மனுதாரர் தரப்பில் 20.09.2024 ம.சா.1</u>**

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு தொகை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மாத செலவிற்காக ரூபாய் 50,000/- கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் 27.11.2020 . இருவீட்டாரின் சம்மதத்துடனும், எனது சம்மதத்துடனும் திருமணம் நடந்து என்றால் சரிதான்.

2. எனது திருமணத்தின்போது கொரோனா ஊரடங்கு இருந்தது என்றால் இல்லை. 50 நபர்களுக்கு மேல் திருமணத்தில் கலந்துக்கொள்ள கூடாது என்று அரசு ஆணை வெளியிட்டு இருந்தது என்றால் இல்லை. எனது திருமணத்தில் எவ்வளவு பேர் கலந்துகொண்டார்கள் என்றால் 100 பேர் கலந்துக்கொண்டார்கள். மொத்தம் 50 பேர் தான் கலந்துகொண்டார்கள் என்றால் இல்லை. நான் என்ன படிப்பு படித்துள்ளேன் என்றால் பொறியியல் படிப்பு படித்துள்ளேன்.

3. நான் திருமணத்திற்கு முன்பு வேலைக்கு சென்றேனா என்றால் நான் 2019ம் வருடமே வேலையை விட்டு நின்றுவிட்டேன். எனக்கு, எதிர்மனுதாரருடன் இரண்டாவது திருமணம் என்றால் சரிதான். முதல் திருமணம் எதற்காக விவாகரத்து ஆனது என்றால் முதல் கணவர் ஆண்மை தன்மை அற்றவர் என்பதாலும், வேலைக்கு

செல்வதாக ஏமாற்றி திருமணம் செய்ததாலும், படிப்பு முடிக்கமால் ஏமாற்றியதாலும், மதுவிற்கு அடிமையாக இருந்ததால் விவாகரத்து வாங்கினேன்.

4. இந்த மனுவிலும் எதிர்மனுதாரர் ஆண்மை அற்றவர் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் எதிர்மனுதாரருடன் வசித்து வந்தேன் என்றால் 4 மாதம் வசித்து வந்தேன். நான் அந்த 4 மாதத்தில் 40 நாட்கள் மட்டுமே எதிர்மனுதாரருடன் சேர்ந்து வசித்து வந்தேன் என்றால் இல்லை.

5. திருமணத்திற்கு பிறகு தாம்பத்தியம் ஏற்படவில்லை என்று பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/.K.Ramkumar,M.L.,
Judicial Magistrate No.I,
Arakkonam.